பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 04 2024 6 45

புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் திமுக உலகிற்கே முன்னோடியாக உள்ளது என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் கடந்த ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்களை திமுக கிடப்பில் போட்டுள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.
- தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கடந்த பத்து ஆண்டுகளில் செயல்படுத்திய நலத்திட்டங்கள் மக்களின் வரவேற்பை பெற்றுள்ளதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் கூறியுள்ளார்.
- கோடை காலத்தில் மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணியை, லக்னோ அணி 28 ரன் வித்தியாசத்தில் வென்றது.

*----- இனி விரிவான செய்திகள் --*

**[]><<>><[]**

மக்களவைத் தேர்தல் நெருங்கி வருவதையடுத்து தமிழகத்தில் அரசியில் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் கட்சித் தலைவர்கள் தங்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்து வருகின்றனர்.

மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதில் திமுக உலகிற்கே முன்னோடியாக உள்ளது என்று திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

வேலூரில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடியோ, தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள காலை உணவு திட்டம் தற்போது கனடாவிலும் கொண்டுவரப்பட்டள்ளதை சுட்டிக்காட்டினார்.

கச்சத்தீவை மீட்பது குறித்து ஆக்கப்பூர்வமான எந்த நடவடிக்கையையும் பிஜேபி தலைமையிலான அரசு மேற்கொள்ளவில்லை என்று அவர் குற்றம்சாட்டினார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்களில் கச்சத்தீவை மீண்டும் இந்தியாவுக்கு பெற்றுத்தருவது குறித்து பேசவில்லை என்று அவர் கூறினார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்தும், அவர்கள் கைது செய்யப்பட்டு படகுகள் பறிமுதல் செய்யப்படுவது குறித்தும் இலங்கை அரசுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுக்கள் எதையும் கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

[]><<>><[]

தருமபுரியில் பிரச்சாரம் மேற்கொண்ட அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, தமிழகத்தில் தங்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது கொண்டுவரப்பட்ட திட்டங்களை ஆளும் திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

ஜாதிவாரி கணக்கெடுப்பை எந்த பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென கடந்த ஆட்சியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், தற்போது ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு எதிராக உள்ள தேசிய கட்சியோடு திமுக கூட்டணி வைத்துள்ளதாகக் கூறினார்.

அக்கட்சி தேர்தல் அறிக்கையில் தெரிவித்த எந்த திட்டத்தையும் நிறைவேற்றவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

[]><<>><[]

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், அதிகரட்டி உள்ளிட்ட பகுதிகளில் பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் எல் முருகன் வாக்கு சேகரித்தார்.

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு மேலும் பல திட்டங்கள் கொண்டுவரப்படும் என்று அவர் தெரிவித்தார்.

[]><<>><[]

தமிழகத்தில் ஆளும் திமுக அரசு மக்கள் நலத் திட்டங்களை அதிக அளவில் செயல்படுத்தி வருவதாக காங்கிரஸ் கூறியுள்ளது.

நாமக்கல்லில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு செல்வப்பெருந்தகை, மத்தியில் கடந்த பத்து ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த பிஜேபி தமது வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று கூறினார்.

தமிழகத்தில் மகளிர், இளைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிக அளவில் உருவாக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிஜேபி ஆட்சியில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை கடுமையாக உயர்த்தப்பட்டதாகவும், தேர்தலை கருத்தில் கொண்டு தற்போது விலைக்குறைப்பு செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

**[]><<>><[]**

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு கடந்த பத்து ஆண்டுகளில் நிறைவேற்றிய திட்டங்கள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் கூறியுள்ளார்.

நெல்லை தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பிஜேபி தலைமையிலான கூட்டணி மத்தியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்தார்.

தமிழகத்தின் தென்மாவட்ட மக்கள் தங்களது கூட்டணிக்கு ஆதரவு தெரிவிப்பதில் உறுதியாக உள்ளனர் என்று அவர் கூறினார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய தங்களது கூட்டணியால் மட்டுமே முடியும் என்று அவர் தெரிவித்தார்.

**[]><<>><[]**

காஞ்சிபுரத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், கடந்த சட்டமன்ற தேர்தலின்போது திமுக அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை என்று கூறினார்.

அஇஅதிமுக தலைமையிலான கூட்டணி ஆரணியில் பட்டுப்பூங்கா அமைப்பதற்கும், நேரடி நெல் கொள்முதல் நிலையம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்தார்.

போளூரில் ரயில்வே மேம்பாலப் பணிகள் விரைந்து முடிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

**[]><<>><[]**

மக்களவை தேர்தலை ஒட்டி பல்வேறு தொகுதிகளைப் பற்றி அறிந்து கொள்ளும் ‘தொகுதி அலசல்’ தொகுப்பில் அரக்கோணம் மக்களவைத் தொகுதி குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல் . . ..

*( வாய்ஸ் பைட் - சுமன் ) -90-- செகண்ட்ஸ்)*

**[]><<>><[]**

கோடை காலத்தில் மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் நேற்று இது தொடர்பாக மத்திய மின்துறை அமைச்சர் திரு ஆர் கே சிங் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அனல்மின் உற்பத்தி நிலையங்களில் போதிய அளவு மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தைப் பெறுவது குறித்தும், தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ள ஐந்து புள்ளி இரண்டு கிகாவாட் மின் உற்பத்தி திட்டங்களை செயல்பாட்டுக்கு கொண்டு வருவது குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த கோடை காலத்தில் இயல்பு நிலையைவிட அதிக அளவு வெப்பத்தின் தாக்கம் இருக்கும் என இந்திய வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளதை அடுத்து, மின் தேவையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்.திய மின்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

**[]><<>><[]**

காஸாவில் மனிதாபிமான அடிப்படையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்த வேர்ல்டு சென்டரல் கிச்சன் குழுவினர் மீது விமான தாக்குதல் நடத்தியதில் எந்த உள்நோக்கமும் இல்லை என்று இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு கூறியுள்ளார்.

**[]><<>><[]**

எகிப்து நாட்டின் அதிபராக திரு **Abdel fattah Al sisi** மூன்றாவது முறையாக நேற்று மீண்டும் பதவியேற்றார்.

**[]><<>><[]**

எல்லை பாதுகாப்புப்படையின் கலை மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நேற்று புதுதில்லியில் தொடங்கியது.

**[]><<>><[]**

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதில் அனைத்து சட்ட நடைமுறைகளும் பின்பற்றப்பட்டதாக அமலாக்கப் பிரிவு நேற்று தில்லி நீதிமன்றத்தில் தெரிவித்தது.

**[]><<>><[]**

மத்திய பிரதேச மாநிலம் பாலகாட் மாவட்டத்தில் காவல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இரண்டு நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

**[]><<>><[]**

மதுரையில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**[]><<>><[]**

தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் சென்னை ஆர் கே நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வீடுகளுக்கு வழங்கப்படும் சிலிண்டர்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

**[]><<>><[]**

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தும் விதமாக ஆட்டோக்களில் ஸ்டிக்கர் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தும் ஆட்டோ வாகன பேரணி நேற்று நடைபெற்றது,

[]><<>><[]

விருதுநகர் அருகே தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய வாகன சோதனையின்போது உரிய ஆவணமின்றி எடுத்துச் செல்லப்பட்ட சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்பிலான தங்க நகைகளை பறிமுதல் செய்தனர்.

[]><<>><[]

நீலகிரி மாவட்டம் உதகையில் மூன்று மாதத்திற்குப் பின் நேற்று பெய்த திடீர் மழை காரணமாக அங்கு குளிச்சியான சூழல் நிலவியது.

[]><<>><[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ அணி 28 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 181 ரன் எடுத்தது.

182 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூரு அணி 19 புள்ளி நான்கு ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 153 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இன்று விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள போட்டியில் தில்லி — கொல்கத்தா அணிகள் மோதுகின்றன.

[]><<>><[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று புவனேஸ்வரில் நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிஸா அணி மூன்றுக்கு — ஒன்று என்ற கோல் கணக்கில் பஞ்சாப் அணியை வென்றது.

இன்று கொச்சியில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கேரளா அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

[]><<>><[]